தமிழக சட்டப் பேரவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் நான்காவது சட்டப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்.

வெள்ளிக்கிழமை, 1967 நவம்பர் 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 10 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"—

என்ற குறட்பாவுடன் இப்பேரவையின் கூட்டத்தைத் தொடங்கு கிறேன்.

1. நீத்தார் நினைவுக் குறிப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தம் வாழ்நாள் முழுதும் இந்தியாவின் சிறந்த நண்பர் என்று புகழ்பெற்ற முன்னாள் பிரிட்டன் நாட்டுப் பிரதமர், லார்ட் அட்லி அவர்கள், 9-10-1967 அன்று காலமானதைக் குறித்தும்,

இந்திய தேசத்தின் விடுதலைக்காகவும், சமநீதிக்காகவும், உண்மைக்காகவும் எண்ணற்ற தியாகங்களைச் செய்து, இறுதி மூச்சுவரை போராடி வந்தவரும், உலகிலிருந்து வறுமை, போர், அச்சம், அறியாமை, இவைகளை விரட்ட கனவு கண்டவரும், சிந்தனையாளரும் செயல் வீரருமான டாக்டர் ராம் மனோகர் லோகியா அவர்கள் 12-10-1967 அன்று மறைந்ததைக் குறித்தும்,

1946-லிருந்து 1948 வரை இம்மாநிலத்தின் ஆளுநராக இருந்த சர் ஆர்ச்பால்ட் நை அவர்கள் 13-11-1967 அன்று காலமானதைக் குறித்தும்,

1937-லிருந்து 1939 வரை கும்பகோணம் பொதுத் தொகுதியிலிருந்ததும், 1946-லிருந்து 1952 வரை தஞ்சை-கும்பகோணம் பொது நகர்புற தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ் நாட்டு சட்டப் பேரவையில் அந்நாள் உறுப்பினராக இருந்த அம்மாப்பேட்டை திரு. பி. வெங்கட்ராம அய்யர் அவர்கள் 29-7-1967 அன்று காலமானதைக் குறித்தும்,

1952-லிருந்து 1956 வரை தமிழ் நாட்டுச் சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த டாக்டர் கே. பி. மேனன் அவர்கள் 6-9-1967 அன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-லிருந்து 1957 வரை திருப்பூர் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டுச் சட்டப் பேரவையில் அந்நாள் உறுப்பினராக இருந்த திரு. பி. எஸ் ரங்கசாமி அவர்கள் 2-10-1967 அன்று காலமானதைக் குறித்தும்.

1946-லிருந்து 1952 வரை திருச்செங்கோடு பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் அந்நாள் உறுப்பினராக இருந்த திரு. டி. எஸ். பட்டாபிராமன் அவர்கள் 6-11-1967 அன்று மறைந்ததைக் குறித்தும்,

1958-லிருந்து தமிழ்நாட்டுச் சட்ட மேலவையில் ஆசிரியர் தொகுதியின் சார்பில் உறுப்பினராக இருந்துவந்த டாக்டர் ஏ. சிதம்பரநாதன் அவர்கள் 22-11-1967 அன்று காலமானதைக் குறித்தும்,

அண்மையில் பஞ்சாப் மாநிலத்தின் முக்கியமான அரசியல் தலைவராக விளங்கிய மாஸ்டர் தாரா சிங் அவர்கள் 22-11-1967 அன்று மறைந்தது குறித்தும்—இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற பேரவைத் தொடர்க் கூட்டத்திற்கும் இந்தப் பேரவைத் தொடர்க் கூட்டத்திற்கும் இடையிலே குறிப்பிடத் தகுந்தவர்கள் மறைந்திருப்பது நமக்கெல்லாம் மிக ஆழ்ந்த வருத்தத்தை அளிக்கக்கூடிய ஒரு செய்தியாகும். மிக முக்கியமாக, இந்தியாவிற்கு விடுதலை வழங்குவதிலே மிகவும் அக்கறை காட்டி அதற்காக அரும்பெரும் பணியாற்றிய லார்ட் அட்லி அவர்களுடைய மறைவு நம்முடைய உள்ளத்தை வாட்டத்தக்க அளவிற்கு வருத்தத்தை உண்டாக்கக் கூடியதாகும். உலகப் போர் முடிந்த பிறகு குடியேற்ற நாடுகளுக்கு விடுதலை வழங்குவதில் முன்னோடியாக இருந்து இந்தியாவுக்கு விடுதலை வழங்குவதில் முன்னின்ற அரசியல் தலைவர்களில் குறிப்பிடத் தகுந்தவராக இந்தியாவிலுள்ள அத்தனை கோடி மக்களுடைய அன்பையும் பெற்று விட்டார். இந்தியா விடுதலை பெற்ற பிறகுதான் வேறு பல நாடுகளும் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டன. அதை யொட்டித்தான் ஆப்பிரிக்க நாடுகளும் நாளுக்குநாள் விடுதலை பெறக்கூடிய சூழ்நிலை இருந்து வருகிறது விடுதலை வழங்குவதற்கு பாடுபடுவதிலே உன்னிப்பாக இருந்து இங்கிலாந்திலே அதற்காக பல பேர்களுடைய எதிர்ப்பு இருந்தும் கூட, இந்தியாவுக்கு விடுதலை வாங்கித் தருவதிலே அரும்பணி ஆற்றிய லார்ட் அட்லி அவர்களுடைய மறைவுக்கு இந்த மன்றம் இரங்கல் தெரிவிப்பது பொருத்தம் உடைய ஒன்றாகும்.

விடுதலை வாங்கித் தருவதிலே பணியாற்றிய பிறகும் ஒரு ஆண்டு காலம் இங்கே ஆளுநராகப் பதவி வகித்த ஆர்ச்பால்ட் நை அவர்கள் மறைந்ததற்கும் இந்த மன்றம் இரங்கல் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

1967 நவம்பர் 24] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இந்தியத் துணைக்கண்டத்திலேயே அஞ்சாமை, துணிவு, ஊக்கம் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக விளங்கிதான் எடுத்துக் கொண்ட காரியத்தை எந்தவிதத்திலும் நிறைவேற்றித் தருவதில் உன்னிப்பாக இருந்து அரசியல் உலகிலேயே எடுத்துக் காட்டாக விளங்கத் தக்க அளவிற்கு பாராட்டத்தக்க பல்வேறு பணிகளை யாற்றிய டாக்டர் ராம் மனோகர் லோகியா அவர்களின் மறைவு பேரிழப்பாகும். தன்னுடைய மனதில் பட்டதை யாருடைய தயவு தாட்சண்யத்திற்கும் இடம் அளிக்காமல் பணியாற்றுபவர்களில் ஒருவராக விளங்கிய அவரது மறைவு இந்திய அரங்கில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். எனவே, அவர்களது மறைவு குறித்தும் இரங்கல் தெரிவிக்க இப்பேரவை கடமைப்பட்டிருக்கிறது.

சீக்கியர்களுடைய தலைவராக இருந்து பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு அகில இந்திய மக்களை மட்டும் அல்லாமல் அகில உலக மக்களுடைய நன்மதிப்பைப் பெற்ற மாஸ்டர் தாராசிங் அவர்களுடைய மறைவும் மிகவும் வருந்தத்தக்க ஒன்றாகும். அது குறித்தும் இம்மன்றம் இரங்கலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

இந்த மன்றத்திலும், பாராளுமன்றத்திலும் பல்வேறு பணிகளை ஆற்றி நன்முறையில் பாடுபட்டவர்களும், அவர்களுடைய நேரம், உழைப்பு, ஆற்றல், அறிவு அத்தனையும் பயன்படுத்தி தொண்டாற்றிய திரு. வெங்கட்டராமன், திரு. கே. பி. மேனன், திரு. டி. எஸ். பட்டாபிராமன் அவர்கள் அனைவரும் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் அனைவரும் மறைந்திருப்பது மிகவும் வருத்தத்தை அளிப்பதாகும். அவர்களுடைய பணிகள், குறிப்பாக தமிழகத்தில் ஆற்றிய பணிகள் சிறப்புற்று விளங்கி உறுதுணையாக இருந்தன.

மேல் அவையின் உறுப்பினராக இருந்து இயற்கைக்கு மாறான வகையில் மறைந்த டாக்டர் சிதம்பரநாத செட்டியார் அவர்களுடைய மறைவு குறித்தும் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்க பேரவை கடமைப்பட்டிருக்கிறது. தமிழ் உலகிலேயே ஒளிவிட்டு விளங்கும் புலவர் பெருமகனை அவர் விளங்கினர். தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவராக இருந்து தமிழ் ஏற்றம் பெறுவதற்காக அரும்பெரும் பணிகளை ஆற்றி வந்தார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம்பெற்று அங்கேயே விரிவுரையாளராகவும், பிறகு பேராசியராகவும், பிறகு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் பணியாற்றி அரசியலில் பங்கு பெறும் வகையில் மேல் அவையில் இரண்டு முறை ஆசிரியர் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் பணியாற்றி வந்திருக்கிறார்கள். திட்டப்படியும், முறைப்படியும், நியாயமாகவும் எதுவும் நடைபெற வேண்டும் என்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்து வந்திருக்கிறார்கள். மதிப்பீட்டுக் குழுவில் இடம்பெற்ற நிலையிலும், பொதுக் கணக்குக் குழுவில் இடம்பெற்ற நிலையிலும் அவர்கள் அந்தப் போக்கினைக் கடைப்பிடித்து வந்தார்கள். சட்டதிட்டங்களை முறைப்படி கடைப்பிடிக்கவேண்டும் என்பதில் ஆழ்ந்த அக்கறை

கொண்டவர். மேல் அவை உறுப்பினராக இருந்து அரும்பணி பல ஆற்றிவந்திருக்கிறார்கள். மதுரை தியாகராயர் கலைக் கல்லூரியின் முதல்வராக இருந்து கட்டுப்பாடு, ஒழுக்கம் இவற்றை நிலைநாட்டி, மாணவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்று முதல்வராகப் பணியாற்றுவதிலே ஒரு எடுத்துக்காட்டாக விளங்கி யிருக்கிறார்கள்.

அவர்கள் சின்டிகேட் அவையிலும், செனட் அவையிலும் உறுப்பினராக இருந்து, பல்கலைக்கழகத்தினுடைய மேம்பாட்டிலே மிக அக்கறை கொண்டு, பல்வேறு பணிகளை ஆற்றி வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மறைவும் ஈடுசெய்ய முடியாத, மிக ஆழ்ந்த வருத்தத்தைத் தரத்தக்க ஒன்றாகும். அந்த வகையிலே அவர்களுடைய மறைவு குறித்து நாம் இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளவும், அன்னாருடைய குடும்பத்தாருக்கு இந்தப் பேரவை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறது.

இப்படிப் பல்வேறு வகைகளில் உலக அரங்கிலும், அகில இந்திய அரங்கிலும், தமிழக அரங்கிலும் சட்டமன்ற, பாராளுமன்றத் துறைகளிலும் அரும்பெரும் பணியாற்றிய பலரும் மறைந்தது குறித்த செய்தி நம்முடைய கவனத்திற்கு வந்திருக்கிற சூழ்நிலை உள்ளபடியே வருந்துவதற்குரிய ஒன்றுதான். அந்த முறையில், இந்தப் பேரவை தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது என்கிற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, அவையின் முதல்வர் மாண்புமிகு திரு. நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த அனுதாபத் தீர்மானத்தை ஆதரித்து, அவர்கள் சொன்ன கருத்துக்கள் அத்தனையையும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளுகிறேன். உலக அரங்கிலும், அகில இந்திய அரங்கிலும், நமது தமிழ்நாட்டு அரங்கிலும், பாராளுமன்றத்திலும், சட்டசபைகளிலும் அங்கம் வகித்து அரும்பணியாற்றி மறைந்த மாமாணிக்கங்கள் அத்தனை பேர்களுடைய ஆத்மாக்களும் சாந்தியடையப் பிரார்த்தித்துக் கொள்ளுவதோடு, அன்னார்களுடைய குடும்பத்தினருக்கும் இந்தப் பேரவை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

திரு. அட்லி பெருமான் அவர்களுடைய மறைவைக் குறித்து, நம்முடைய தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, அகில இந்தியாவிலே மட்டுமல்ல, உலகத்திலே எங்கெங்கெல்லாம் நாடுகள் அடிமைப்பட்டிருந்து விடுதலை அடைந்திருக்கின்றனவோ அங்கெல்லாம் மக்கள் நிச்சயமாக அனுதாபப்படுவார்கள் என்பதிலே சந்தேகம் கிடையாது. திரு. அட்லி அவர்கள் இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். யுத்தம் ஆரம்பித்தவுடனே, தேசத்திலுள்ள எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து தேசிய மந்திரிசபையொன்றை அமைக்க வேண்டும் என்ற நிலையில், கட்சிகளையெல்லாம் மறந்து அவர்கள் துணைப் பிரதமராக இருந்து, யுத்தம் நடக்கும் சமயத்தில், பணியாற்றினர்

1967 நவம்பர் 24] [திரு. பி. ஜி. கருத்திருமன்]

கள். அது மட்டும் அல்ல. ஒரு சிறந்த எதிர்க்கட்சியாக, பயனுள்ள எதிர்க்கட்சியாக, மக்களுக்கு நன்மை புரிவ தொன்றையே குறிக்கோளாகக் கொண்டு நல்ல ஆலோசனைகளைக் கூறும்படியான எதிர்க் கட்சியாக இருந்து செயல்பட்ட காரணத் தால்தான், தொழில் கட்சி மீண்டும் தேர்தலில் வெற்றிபெற்றது என்பதையும் நாம் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். திரு. அட்லி பெருமான் அவர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும், ஜனநாயக முறையிலே, மிகவும் சிறந்த, உயரிய பாரம்பரியத்தை ஏற்படுத்துவதிலேயும், மக்களுக்கு நன்மை புரிவதிலேயும், தேசத் திற்கு ஓர் இடுக்கண் ஏற்படும்போது, கட்சிகளையெல்லாம் மறந்து, தேசம் ஒன்றுதான், தேசியப் பணி ஒன்றுதான், தேசிய ஒழுக்கம் ஒன்றுதான் தலையாய கடமை என்ற உணர்ச்சியை ஏற்படுத்துவதி லேயும் அவர்கள் எடுத்துக்காட்டாக விளங்கினார்கள். திரு. அட்லி அவர்கள் பிரதமராக வந்திருக்காவிட்டால், நிச்சயமாக நமது தேசத்திற்கு அவ்வளவு சீக்கிரத்திலே விடுதலை கிடைத்திருக்காது என்பதையும் நாம் உணரவேண்டும். நம் நாட்டு மக்களுடைய அபிலாஷைகளையும், நம் நாட்டு மக்களுடைய சுதந்திர வேட்கை யையும் மனிதாபிமான உணர்வோடு மதித்து, அந்த வகையிலே நடந்து கொண்ட திரு. அட்லி பெருமான் அவர்களுடைய மறை விற்கு அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு அன்னா ருடைய குடும்பத்தாருக்கும் இந்தப் பேரவையின் மூலமாக நம் முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அரசியலில் அவர்கள் அனுசரித்த கோட்பாடுகளையும், வாழ்முறை களையும் நாமும் பின்பற்ற வேண்டும்.

அடுத்து, டாக்டர் ராம் மனோஹர் லோகியா அவர்களுடைய மறைவும் ஈடு செய்ய முடியாத ஒன்றாகும். நமது அவை முதல்வர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னமாதிரி, டாக்டர் ராம் மனோஹர் லோகியா அவர்கள், எந்தக் காரியத்தை நினைத்தா லும் சரி, எந்த இடத்தில் இருந்தாலும், எப்படி இருந்தாலும், தான் நினைத்ததை நினைத்தமாதிரி சொல்லக்கூடிய அறிவும், ஆற்றலும், திறமையும் படைத்தவராக, அஞ்சா நெஞ்சத்தோடு வாழ்ந்தார்.

அடுத்து, சீக்கியர்களின் தலைவராக இருந்த மாஸ்டர் தாரா சிங் அவர்களுடைய மறைவும் வருத்தத்தைத் தரத்தக்கதாகும். அவர்கள் ஒரு குலத்திற்குத் தலைவராக இருந்தாலும்கூட, தேசத் தின்மேல் அவருக்கு இருந்த பற்று அளவிடற்கரியது. நம் நாட்டின் மீது பாகிஸ்தான் படையெடுத்த காலத்தில் அவர் காட்டிய வீர தீரமும், சீனா படையெடுத்த சமயத்தில் தேசமெல்லாம் ஒன்று திரண்டு எழுச்சியடைந்த நேரத்தில் அவர் காட்டிய தேச பக்தி யுணர்வும் குறிப்பிடத்தக்கது. சீக்கியர் குலத்திற்கு தலைவராக இருந்தாலும், நாட்டுக்கே திலகமாக அவர்கள் விளங்கினார்கள் என்பதை நாம் அறிவோம்.

அடுத்து, நம்முடைய சட்டசபை உறுப்பினராகவும், என்னு டைய அருமை நண்பராகவும் இருந்த திரு. பி. எஸ். இரங்கசாமி அவர்கள் மறைந்தது மிக மிகக் கவலைக்குரிய ஒரு விஷயமாகும்.

[திரு. பி. ஜி. கருத்திருமன்] [1967 நவம்பர் 24

அவர் சாதாரண நிலையில் இருந்து சட்டமன்ற உறுப்பினர் பதவி வரையில் உயர்ந்தவர். அவர் இருதயக் கோளாறினால் திடீரென்று மறைந்துவிட்டார்கள். அவர்கள் சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்; காங்கிரசுக்காக மிகவும் பாடுபட்டவர். காங்கிரசுக்காக எல்லாவற்றையும் தியாகம் செய்தவர். அவருடைய தியாகத்தை அறிந்த மக்கள் தங்களுடைய பிரதிநிதியாக அவரை சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அவர் 1952-ம் ஆண்டிலிருந்து 1957-ம் ஆண்டு வரை உறுப்பினராக இருந்தார்.

மறைந்த நம்முடைய நண்பர் திரு. டி. எஸ். பட்டாபிராமன் அவர்கள் இங்கே சட்டசபையில் உறுப்பினராக இருந்தார்கள். பாராளுமன்றத்திலும் உறுப்பினராக இருந்தார்கள். அவர்களும் நம்முடைய நாட்டு மக்களுடைய பிரச்சினைகளை அவ்வப்போது எடுத்துச்சொல்லி, அரும்பணியாற்றி வந்திருக்கிறார்கள். அவருடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பேரவையின் முதல்வர் திரு. நெடுஞ்செழியன் அவர்கள் சொன்னமாதிரி, உலக அரங்கிலும், இந்திய அரங்கிலும், தமிழக அரங்கிலும் சிறப்புற விளங்கி, மக்களுக்கு அரும்பணியாற்றி, மறைந்த அத்தனை பேர்களுடைய குடும்பத்தாருக்கும் நம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பாக டாக்டர் சிதம்பரநாதன் அவர்கள், மனத்திற்கு மிகவும் கவலையைக் கொடுக்கக்கூடிய விதத்தில் மறைந்திருக்கிறார். அவர் தமிழில் மிகுந்த ஆர்வம் உள்ளவர். தமிழ்ப் பண்பு உள்ளவர். தமிழிலே சிறந்தவர்; பெரிய பெரிய பதவிகளை வகித்தவர். ஆனால், திடச் சித்தம் இல்லாத காரணத்தால், துரதிருஷ்டவசமான முடிவு அவருக்கு ஏற்பட்டதைக் குறித்து நாம் அனுதாபத்தைத் தெரிவிக்கவேண்டும்.

அவை முன்னவர் அவர்கள் சொன்ன அத்தனை கருத்துக்களையும், மறைந்த பெரியோர்களுடைய குடும்பத்தினருக்கு நமது இதயம் கலந்த அனுதாபத்தைத் தெரிவிக்கவேண்டும் என்கிற தீர்மானத்தையும் மனப்பூர்வமாக ஆதரித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த பெரியவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும், ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

(அவையினர் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றார்கள்.)